

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களிடம், சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ம. சங்கரநாராயணன் மற்றும் மயிலாடி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. தா. லெளலின் மேபா ஆகியோர்கள் சுவச்சதா சான்றிதழ்களை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (26.12.2016) காண்பித்து, வாழ்த்து பெற்றார்கள்.

செ.வெ.எண்: 910/2016 நாள்: 26.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களிடம்,**
**மத்திய அரசால் திறந்தவெளி மலங்கழித்தல் இல்லாத பேரூராட்சிகளாக தேர்வு செய்யப்பட்ட சுசீந்திரம் மற்றும் மயிலாடி பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட சுவச்சதா சான்றிதழ்களை, செயல்அலுவலர்கள் இன்று (26.12.2016) காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.**

தமிழ்நாட்டிலுள்ள 528 பேரூராட்சிகளில் முதன்முறையாக திறந்தவெளி மலங்கழித்தலை 100 % முற்றிலுமாக நீக்கும் திட்டத்தின் கீழ், சிறப்பாக செயலாற்றிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 55 பேரூராட்சிகளில், சுசீந்திரம் பேரூராட்சி மற்றும் மயிலாடி பேரூராட்சிக்கு சுவச்சதா சான்றிதழ்களை இந்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் திரு. வெங்கைய்யா நாயுடு அவர்களால் புதுடில்லியில் 22.12.2016 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

இதனை, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களிடம், சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ம. சங்கரநாராயணன் மற்றும் மயிலாடி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. தா. லௌலின் மேபா ஆகியோர்கள் சுவச்சதா சான்றிதழ்களை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (26.12.2016) காண்பித்து, வாழ்த்து பெற்றார்கள்.

நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.